

# இலக்கியச் சிந்தனை வெளிகள்

SHANLAX PUBLICATIONS
61, T.P.K. Main Road,
Vasantha Nagar, Madurai - 625 003
ISBN 938064675-7
9789380646752

இலக்கியச் சிந்தனை வெளிகள்
முனைவர் பெ.சுமதி

இலக்கியச் சிந்தனை வெளிகள்



முனைவர் பெ.சுமதி

## நூல் விபரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இலக்கிய சிந்தனை வெளிகள் |
| ISBN | : | 978-93-80686-75-2 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | ஜனவரி, 2014 |
| நூல் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 182 |
| பதிப்பாளர் | : | ஷான்லாக்ஸ் பிரஸ்,<br>மதுரை. www.shanlaxpress.com |
| விலை | : | ரூ.120/- |


## முன்னுரை

இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியலை பதிவு செய்வது. சமூகத்தில் நடைபெறும் சிக்கல்கள் எண்ணற்றவையாக இருந்தாலும் அதில் படைப்பாளர்களின் மனதைத் தொடுவது ஒரு சில நிகழ்வுகள் மட்டுமே. அந்த நிகழ்வுகள்தான் அச்சமூகத்தின் ஏற்றத் தாழ்வை நிர்ணயிப்பது. பண்பாட்டை தொடர்ந்து நிலை நிறுத்தி வருவதும் இலக்கியப் படைப்புகள்தான். அந்தப் படைப்புகளின் வழியாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சங்க கால மக்களின் பண்பாட்டைப் பற்றி நாம் இன்று அறிந்து கொள்ளுகின்றோம். அதோடு மட்டுமல்லாமல் அக்கால மக்களின் பழக்க வழக்கங்களையும், மரபுகளையும் தொடர்ந்து நாம் இன்றும் பின்பற்றி வருகின்றோம். அதற்குக் காரணம் இலக்கியப் பதிவுகள் என்றால் மிகையாகாது.

சங்க இலக்கிய மக்களின் வாழ்க்கையில் உரிப்பொருள் முக்கிய இடம் பெறுகின்றது. ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு உரிப்பொருள் என்ற நிலையில் அவர்களின் பண்பாடு கட்டமைக்கப்பட்டிருந்த விதத்தை சங்க இலக்கியங்கள் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. சங்க கால மக்கள் பழி பாவங்களுக்கு அஞ்சி அரசனின் ஆடசிக்குக் கட்டுப்பட்டு, அதே சமயத்தில் அரசனும் மக்களின் நலனே தன் நலன் என்று வாழ்ந்த மக்களின் சமூகக் கட்டமைப்பை இலக்கியங்களின் வழி அறிந்து கொள்ள முடிகின்றன. அச்சமூகம் பாதுகாப்பும், செல்வமும் நிறைந்த பொற்காலமாகக் காட்சியளித்தது என்பதை இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

சங்க இலக்கியம் மட்டுமல்லாமல் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களான பதினென் கீழ்க்கணக்கு நூல்களும் மக்களை நல்வழிப்படுத்துவதற்கான அறக்கருத்துக்களை வலியுறுத்துகின்றன. அறஇலக்கியங்கள்